உயர்கல்வியில் ‘புதுமைப் பெண்’ - ‘தமிழ்ப்புதல்வன்’ முதன்மையான திட்டங்கள்!

சட்டப் பேரவையில் அமைச்சர் - முனைவர் க.பொன்முடி பதிலுரை... 5-ஆம் பக்கத் தொடர்ச்சி

இவைகளையெல்லாம் செய்வதோடு, சுயநிதிக் கல்லூரி குறித்து இங்கே பேசுகிற சட்டமன்ற உறுப்பினர் மு.பெ. கிரி அவர்கள் கேட்டார்கள். சுயநிதிக் கல்லூரிகள் வேண்டுமென்று அவர் கேட்டார். அந்தக் கல்லூரிக்கும் நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். நான் சொன்ன அடிப்படை வசதிகளெல்லாம் வேண்டும். அந்த நிலம் இருப்பது மட்டுமல்லாமல் 25 கோடி ரூபாய் பணமும் கட்ட வேண்டும். 25 கோடி ரூபாய் பணத்தைக் கட்ட வேண்டும். 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் நிலமும் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் அரசாங்கத்தின் பேரில் எழுதி வைக்க வேண்டுமென்ற விதிகள் எல்லாம் இருக்கிறது. அந்த விதிகளுக்குட்பட்டு நீங்கள் கேட்டீர்களென்றால், அதைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைத் தலைவர்: பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக்க வேண்டும்.

அமைச்சர் முனைவர் க. பொன்முடி: அடிக்கடி இவர் கேட்காத நேரமே கிடையாது. உறுப்புக் கல்லூரியெல்லாம் அரசுக் கல்லூரி ஆக்குங்கள் என்று சொல்லி. அதையும் நாங்கள் போன வருடமே சொல்லி அதையும் நாங்கள் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதுபோன்று ஏதேனும் இருக்குமானால் அதையும் செய்வதற்கு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

பேரவைத் தலைவர்: 2 உறுப்புக் கல்லூரியையும் நீங்கள்தான் தந்தீர்கள்.

அமைச்சர் முனைவர் க. பொன்முடி: அந்த நாளில் இருந்ததை உறுப்புக் கல்லூரியாக்க வேண்டும். அந்த உறுப்புக் கல்லூரியை நீங்கள் முதலில் அரசுக் கல்லூரியாக்க வேண்டுமென்று கேட்கிறீர்கள். முதலில் உறுப்புக் கல்லூரியாகவாவது ஆகட்டும் என்று சொன்னீர்கள். அதை ஆக்கினோம். அதற்கான ஏற்பாடுகளையும் அடுத்த ஆண்டு.

பேரவைத் தலைவர்: இல்லை. ஏற்கெனவே இரண்டை உறுப்புக் கல்லூரியாக நீங்கள் தந்துவிட்டீர்கள்.

அமைச்சர் முனைவர் க. பொன்முடி: அதைத்தான் நானும் சொல்கிறேன்.

பேரவைத் தலைவர்: இரண்டையும் அரசுக் கல்லூரியாக ஆக்குங்கள்.

அமைச்சர் முனைவர் க. பொன்முடி: அதைத்தான் சொல்கிறார். அவர் முதலில் இருந்து கேட்டு. அதை உறுப்புக் கல்லூரியாக்க வேண்டும், உறுப்புக் கல்லூரி வேண்டுமென்று கேட்டவரும் அவர்தான். உறுப்புக் கல்லூரியாக கொடுத்த பிறகு, அதை அரசுக் கல்லூரியாக ஆக்க வேண்டுமென்று கேட்கிறார். அப்போதே அரசுக் கல்லூரியாக்க வேண்டுமென்றுதான் கேட்டார். உறுப்புக் கல்லூரியாகவாது ஆக்குகிறேன் என்று சொல்லி ஆக்கினோம். இப்போது அரசுக் கல்லூரியாகக் கேட்கிறார். நிச்சயமாக சபாநாயகருடைய கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றுவதற்கான எல்லா ஏற்பாடுகளைச் செய்வோம்.

அதேபோன்று, இங்கே பேசிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய முகம்மது ஷாநவாஸ் அவர்கள் இந்த SLET, NET பற்றியெல்லாம் பேசினார். இந்த SLET, NET பற்றிய case Court-ல் இருக்கிறது.

4,000 பேருக்கு postings போடவேண்டுமென்று சொல்லி, அந்த தேர்வுகள்கூட நடத்தாமல், அதில் பல்வேறு பிரச்சினைகள் வந்து, அவையெல்லாம் court-ல் இருக்கிறது. நீதிமன்றத்திலிருந்து நிச்சயமாக அதற்கான தீர்ப்பு வரும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அதேபோல, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடர்பாக, நான் ஏற்கெனவே சொன்னேன் 2 ஏக்கர், 3 ஏக்கர் மற்றும் 5 ஏக்கர் என்று. அதேபோலத்தான், private college ஆரம்பிக்க வேண்டுமென்றாலும் அதற்கும் அதேமாதிரி தான். அந்தக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கான எல்லா செலவுகளையும் நீங்கள் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொண்டு, நீங்கள் கொடுத்திருக்கிற பல்வேறு வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் விலக்கிக் கொள்ள வேண்டுமென்றுஅன்போடுகேட்டுக்கொள்கின்றேன். இந்த வெட்டுத் தீர்மானங்களில் சொல்லப்பட்டிருப்பதையெல்லாம் படித்திருக்கிறோம். seat. அதுபற்றிச் சொல்ல மறந்துவிட்டேன். சென்ற ஆண்டுபோலவே இந்த ஆண்டும் அரசு கலைக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இடங்களின் எண்ணிக்கை 20 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்படும். அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 15 சதவிகிதம் உயர்த்தப்படும். தனியார் கல்லூரிகளில் 10 சதவிகிதம் உயர்த்தப்படும். ஏனென்றால் நான் ஏற்கெனவே சொன்னதுபோல, Government colleges-க்கு நிறைய மாணவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்காக சென்ற ஆண்டுகளைப்போலவே இந்த ஆண்டும் உயர்த்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை 20 சதவிகிதம் அதிகரிப்பு!

அறிவிப்புகள்

1.தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிலகங்களை மேம்படுத்தவும், மாணாக்கர்கள் சேர்க்கையை உயர்த்தவும், நவீன தொழில்நுட்பங்களை வழங்கவும், 2025-26 கல்வியாண்டு முதல் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, 4 சிறப்பு பயிலகங்களில் பின்வரும் புதிய பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்

2.கோயம்புத்தூரில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்க்கை பெறும் பெருமளவிலான மாணவர்கள், தங்கி படிப்பதற்கான வசதி ஏற்படுத்தித் தருவதன் மூலம், அவர்கள் கல்வியில் கவனம் செலுத்தி படிப்பினைத் தொடர முடியும் என்பதால், அக்கல்லூரியில் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் 300 மாணவர்கள் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

3. ஈரோட்டில் உள்ள அரசு பொறியியற் கல்லூரியில் சேர்க்கை பெறும் பெருமளவிலான மாணவர்களுக்கு இடமளிக்கவும், மாணவர்கள் கல்வி முயற்சிகளில் கவனம் செலுத்தி படிப்பினை தொடரும் நோக்கத்துடன் அக்கல்லூரியில் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் 200 மாணவர்கள் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

4. சென்னை, தரமணியில் உள்ள மைய பல வகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களில் சேர்க்கை பெறும் மாணவர்கள் தங்கி பயில்வதற்கான வசதியை ஏற்படுத்தி தருவதன் மூலம் கல்வியில் கவனம் செலுத்தி பயில வேண்டும் என்ற நோக்கத்துடன், மைய பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் (CIT Campus) ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் 300 மாணவர்கள் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

5. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவியர்களுக்கென தனி ஓய்வறை ஒன்று தலா ரூ.5.00 இலட்சம் வீதம், 171 அரசு கல்லூரிகளில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் தொழில்நுட்ப ஆய்வகங்கள், மாணாக்கர்களின் திறமைகளை வளர்ப்பதிலும், திறமையான மனிதவளத்தினை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, கோயம்புத்தூர், சேலம் மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் ஆய்வகம் தலா ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த ஆய்வகம், மாணாக்கர்களுக்கு பலவிதமான பயிற்சி திட்டங்கள், பட்டறைகள் (Workshops) மற்றும் படிப்புகளை வழங்கும்.

7. மின்சார வாகன வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, மோட்டார் மற்றும் மோட்டார் கட்டுப்பாடு, மின்சார வாகன மின்கலன்கள் மற்றும் மின்கல மேலாண்மை அமைப்புகள், மின்னேற்றி, உட்பொதிக்கப்பட்ட அமைப்புகள், பொருட்களின் இணையம் மற்றும் தானியங்கி வாகன மின்னணுவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்த, திருநெல்வேலி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம், தலா ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில், நிறுவப்படும்.

8. மாணாக்கர்கள், பொருட்களின் இணைய பயன்பாடுகள் மற்றும் பிற மேம்பட்ட உட்பொதிக்கப்பட்ட அமைப்பு அடிப்படையிலான திட்டத்தை உருவாக்க, காரைக்குடி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள 2 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருட்களின் இணையம் ஆய்வகம் (Internet of Things Labouratory), தலா ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

9. பொருள்சேர் உற்பத்தியானது (Additive Manufacturing) பொருள் கழிவுகள், சரக்கு மற்றும் பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை குறைக்க உறுதியளிக்கிறது. இந்த மையம் தொழில் துறை, அரசு மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஒருங்கிணைத்து நிலையான தயாரிப்புகளுக்கான மேம்பாடு, குறைந்த செலவில் அதிக உற்பத்தித்திறனைக் கொண்டிருப்பது, தொடர்புடைய கல்வி மற்றும் பயிற்சியை ஆதரிப்பது மற்றும் பல நோக்கங்களைக் கொண்டுள்ளதாகும்.

எனவே, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருள்சேர் உற்பத்தி ஆய்வகம், தலா ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

10. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பொறியியல் பட்டதாரிகளின் முதுகலை படிப்பை ஊக்குவிக்கவும், அவர்களின் வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்தவும், ஒரு மாணாக்கருக்கு ரூ.8,500/- வீதம் ரூ.42.50 இலட்சம் செலவில் 500 மாணாக்கர்களுக்கு GATE, IES, CAT, GMAT, GRE, IELTS மற்றும் TOEFL போன்ற போட்டித் தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்களிடையே ஏற்பட்டுள்ள சிறந்த வரவேற்பின் அடிப்படையில், போட்டித் தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 500-லிருந்து 1,400-ஆக உயர்த்தப்படும். இதற்காக கூடுதலாக ரூ.77 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

11. தற்போதைய நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்காக திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் மூலம் தொழிற்சாலைகளின் தற்போதைய அதிநவீன தேவைகளுக்கேற்ப, ஆசிரியர்களுக்கு நீண்டகால மற்றும் குறுகியகால பயிற்சி வகுப்புகளும், கருத்தரங்குகளும், பயிற்சிப் பட்டறை வகுப்புகளும் நடத்தப்படும். இதற்காக, தொடர் செலவினமாக ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

12. 2022-23 மற்றும் 2023-24 -ஆம் ஆண்டுகளில் துவங்கப்பட்ட 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளிலிருந்து அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்ட 27 அரசுக் கல்லூரிகள் என ஆக மொத்தம் 48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவைப்படும், ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கான இருக்கைகள், மேசைகள் மற்றும் வகுப்பறைகளுக்கான செராமிக் கரும்பலகைகள் ஆகிய தளவாடங்கள் ரூ.7.05 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

13. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் தொடங்கப்பட்ட 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மாறிவரும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாட்டின் வரலாறு குறித்து ஆய்வுகள் முன்னெடுக்கப்படும். ஆண்டுதோறும் 10 முதல் 15 ஆய்வுகள் வரை மேற்கொள்ளப்படும்.

14. திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்தில், அறிவியலின் அடிப்படைக் கருத்துக்களை எளிமையாகவும் பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்கள் புரிந்து கொள்ளும் விதமாக, “வேடிக்கை அறிவியல் காட்சிக்கூடம்” ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

15. 2023-24-ஆம் கல்வியாண்டில், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக அளவில் தேர்ச்சி பெற்று, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு பெருவாரியான மாணாக்கர்கள் விண்ணப்பித் துள்ளனர். அவர்களுள் ஒப்பளிக்கப்பட்ட மாணாக்கர் சேர்க்கை விகிதம் போதிய அளவு இல்லாத நிலையில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்த போதிலும் பல மாணாக்கர்கள் கல்லூரிகளில் சேர்க்கை பெற வழி வகை இல்லாத நிலை உள்ளது.

மேலும், இம்மாணாக்கர்கள் வேறு கல்லூரிகளிலும் சேர்ந்திட வாய்ப்பில்லாத நிலையில், இந்த கல்வியாண்டு அவர்களுக்கு வீணாகும் நிலை உள்ளது. இதனை கருத்திற் கொண்டு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2024-25-ஆம் கல்வியாண்டில், அரசு கல்லூரிகளில் 20%-மும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில்

15%-மும் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் 10%-மும் மாணாக்கர் சேர்க்கை அதிகரிக்கப்படுகிறது.

அதைத்தான் நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை 20 சதவிகிதம், 15 சதவிகிதம், 10 சதவிகிதம் அதிகரிக்கப்படும் என்ற அறிவிப்பையும் உங்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களை பணிவன்போடு கேட்டு, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) சரியாக 2-00 மணி ஆகிறது. என்னுடைய உரையை முடித்துவிட்டேன்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலுரை வழங்கினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாக - 11 பெண் ஓதுவார்கள் உட்பட

42 திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமனம்!

பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூன் 24- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (24.06.2024) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி.அய்யனார், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, சட்டமன்றப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

பேரவையில், உறுப்பினர்களின் கேள்வியும், அமைச்சர் பி.கே.சேகர்பாபுவின் பதிலும் வருமாறு:-

எஸ்.ஆர்.ராஜா: தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம், அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோரிய அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் என்பது இந்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் வருகின்ற திருக்கோயிலாக இருந்தாலும் அதற்கு திருப்பணி தேவை என்று மாநில அரசின் அழுத்தம் காரணமாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 05.07.2023 அன்று குடமுழுக்கு முடிவுற்றது. வரலாற்று சிறப்புமிக்க சாதனையாக இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 42 திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதில் 11 ஓதுவார்கள் பெண் ஓதுவார்கள். அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கும் ஒரு பெண் ஓதுவார் நியமிக்கப்பட்டு, அனைத்து பூஜைகளும் கால நேரத்தின்படி நடைபெற்று கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினருக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் **எஸ்.ஆர்.ராஜா:** நான் இந்த கேள்வியை தொடுத்தவுடன் நமது அரசு 25 தினங்களுக்குள்ளாக சுற்றறிக்கை அனுப்பி உடனடியாக அது என் பார்வைக்கு வந்தது. மாடம்பாக்கம், பதுவஞ்சேரி உள்ளிட்ட மூன்று கிராம பொதுமக்களும், அனைத்து அரசியல் கட்சியினரும் ஒன்று சேர்ந்து மிகச் சிறப்பான முறையில் அந்த குடமுழுக்கை நடத்தினார்கள். சுமார் 15 ஆயிரம் மக்கள் குடமுழுக்கு விழாவில் கலந்துக் கொண்டார்கள். நானும் சென்றிருந்தேன். இதற்காக அரசுக்கு மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். அந்த திருக்கோயிலுக்கு பெண் ஓதுவாரும் நியமிக்கப்பட்டுள்ளார். 1,000 ஆண்டு பழமை வாய்ந்த அத்திருக்கோயிலுக்கு 84 ஏக்கர் இடம் இருக்கிறது. சென்னையை ஒட்டிய பகுதியாக இருப்பதால் மதிப்புமிக்க இடங்களாக உள்ளது. அந்த கோயிலுக்கு சொந்தமான 4 ஏக்கர் நாலு செண்ட் இடத்தில் திருமண மண்டபம், வணிக வளாகம் அமைத்து தந்தால் அப்பகுதி மக்களுக்கு மகிழ்ச்சியாக இருப்பார்கள் அமைத்து தருவீர்களா. அமைச்சர் அமைத்து தருவாரா என கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் ரூ.257 கோடி மதிப்பீட்டில் 73 திருமண மண்டபங்கள் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. உறுப்பினர் கோரிய திருமண மண்டபங்கள் கட்டுகின்ற பணிகளை எடுத்துக் கொள்வதற்கு முன்பாக அந்த திருக்கோயிலில் நடைபெறுகின்ற திருமணங்கள், நிதிவசதி, தொடர் செலவீனம், தொடரா செலவீனம் ஆகியவற்றை கணக்கிட்டு வாய்ப்பிருக்குமானால் நிச்சயமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்தாண்டு திருமண மண்டபம் கட்டுவதற்கு உண்டான பணிகளை மேற்கொள்வோம். மீதமுள்ள நிலத்தில் திருக்கோயிலுக்கு வருவாய் ஏற்படுத்துகின்ற அளவிற்கு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தங்கள் கோரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா : அந்த திருக்கோயிலில் இரண்டு பெரிய குளங்கள் இருக்கிறது. அந்த குளங்களையும் சீர் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். அதுபோல தாம்பரம் தொகுதியில் கற்பக விநாயகர் மற்றும் கந்த பெருமாள் திருக்கோயில் திருப்பணி குடமுழுக்கு செய்து தருவீர்களா என்றும், தாம்பரம் தொகுதி சேலையூர் அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த இந்த அரசு முன்வருமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு : உறுப்பினர் கோரிய அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில் என்பது பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 65 சதவீத பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் மீதம் இருக்கின்ற பணிகளை நிறைவு செய்து குடமுழுக்கு நடத்தப்படும். சேலையூர் அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயிலுக்கு 2004 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 20 ஆண்டுகளுக்குப் பின்பு தற்போது மண்டலக்குழு மற்றும் மாநில வல்லுநர் குழு ஒப்புதல் பெறப்பட்டு உபயதாரர் நிதி 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மாத காலத்திற்குள் அந்த திருப்பணியும் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் **பி.அய்யப்பன் :** உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி, சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பிரசித்தி பெற்ற சதுரகிரி அருள்மிகு சுந்தர மகாலிங்கம் கோயில் மலைக்கு ஏறி செல்வதற்கு பக்தர்கள் பயன்பாட்டிற்காக பாலங்கள் கட்டுவதற்கும், மலை அடிவாரத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கும் டெண்டர் விடப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இன்னும் பணிகள் துவக்கப்படவில்லை பக்தர்கள் நலன் கருதி உடனடியாக நிறைவேற்றி தருமாறு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு : உறுப்பினர் கோரிய அருள்மிகு சுந்தர மகாலிங்கம் திருக்கோயிலானது மலை பகுதியில் அமைந்துள்ளது. அப்பகுதி வனத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதால் பக்தர்களின் பயன்பாட்டிற்காக பாலங்கள் கட்டுவதற்கும், தங்கும் விடுதி அமைப்பதற்கும் வனத்துறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் பணிகளை தொடங்குவதற்கு உண்டான நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத்துறை மேற்கொள்ளும் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் **இ.கருணாநிதி :** பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டை குமரகுண்டன் கோயில் அருகில் உள்ள பிரசன்ன யோகா ஆஞ்சநேயர் திருக்கோயில் மற்றும் பெருமாள் கோயில் 40 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்டது. அதேபோன்று பொழிச்சலூர் ஊராட்சியில் ஆனந்த வள்ளி சமேத அகதீஸ்வரர் கோயில் குலோத்துங்க சோழ மன்னனால் கட்டப்பட்டது. இந்த மூன்று கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் எப்போது நடத்தப்படும் என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : உறுப்பினர் கோரிய அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் பரம்பரை தக்கார் முறைகேடுகளில் ஈடுபட்டதன் காரணமாக அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு, தற்போது துறையின் சார்பில் தக்கார் நியமிக்கப் பட்டிருக்கின்றார். அந்த திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள மண்டல குழு, மாநில குழு ஒப்புதல் பெறப்பட்டு எவ்வளவு விரைவாக பணிகள் மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக திருப்பணிகளை மேற்கொள்வதற்கு துறை ஒப்புதல் வழங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கு.பிச்சாண்டி : எனது கீழ்ப் பெண்ணாத்தூர் தொகுதியிலே கருங்காலி குப்பம் பெருமாள் கோயில், அதேபோல கீழாத்தூர் கோயில், சொரங்குளத்தூர் கோயில் ஆகியவற்றில் பணிகள் பாதியளவே நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருக்கிறது. அதை விரைந்து நடைபெறுவதற்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு மாஸ்டர் பிளான் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறதா, திருச்செந்தூர், பழனியை போல மிக அதிக அளவில் தெலுங்கானாவிலும், ஆந்திராவிலிருந்தும் பல லட்சக்கணக்கான மக்கள் தினசரி வருகை தந்து கொண்டிருக்கும் காரணத்தால் அதற்கான மாஸ்டர் பிளானை தயாரித்து வேண்டிய வசதிகளை பக்தர்களுக்கும், அங்கே ஊரில் இருக்கக்கூடியவர்கள் வீடுகளை கூட செல்ல முடியாத ஒரு சூழல் இருக்கின்றது ஆக அந்த முழுமை திட்டத்தை தயாரித்து திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கான வசதிகளை செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா, அதேபோல கோயில்களிலே செலுத்தப்பட்ட தங்க காணிக்கைகளை கட்டிகளாக உருவாக்கி வங்கிகளில் எந்தெந்த கோயிலுடைய தங்கங்கள் அப்படி டெபாசிட் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தொடர்ந்து அந்த பணிகளை நம்முடைய அறநிலையத்துறை செய்யுமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலை பொறுத்தளவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடி பார்வையில் அந்த மாவட்டத்தின் அமைச்சர் அண்ணன் வேலு 10 நாட்களுக்கு ஒருமுறையாவது ஆய்வு கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார். அந்த வகையில் முதல் கட்ட மாஸ்டர் பிளான் என்பது சுமார் 36 கோடியே 41 லட்சம் ரூபாயில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அந்த திருக்கோயிலுக்கு ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து பௌர்ணமி தினத்தில் சுமார் 30 லட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்ற நிலை உள்ளது. இதை கருத்தில் கொண்டு இரண்டாவது மாஸ்டர் பிளான் திட்டத்தில் பக்தர்களுக்கு தேவையான தங்கும் இடவசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்ற மாவட்ட அமைச்சர் அவர்களின் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, இந்து சமய அறநிலைத்துறை அறிவிப்பில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை துணைத்தலைவர் தங்க முதலீட்டு திட்டம் குறித்து கோரினார்கள். இந்த திட்டத்தை முதலில் கொண்டு வருகின்றபோது இந்த துறைக்கு ஏற்படுத்தாத அவமானங்களே இல்லை. அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து தங்க முதலீட்டு திட்டத்தில் 13 திருக்கோயில்களிலிருந்து பெறப்பட்ட 257 கோடியே 22 இலட்சத்து 36 ஆயிரத்து 910 ரூபாய் மதிப்பிலான 442 கிலோ 107 கிராம் 030 மில்லிகிராம் எடை கொண்ட தங்கக் கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கு ரூ. 5 கோடியே 79 இலட்சத்து 12 ஆயிரத்து 671 ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது. இந்த வட்டித் தொகை அந்தந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், பக்தர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலளித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்ச